# முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான சரியான பாதை...

நம் நாடு ஜனவரி 26, 1950 அன்று குடியரசு நாடாக மலர்ந்தது. இந்திய அரசியல் சாசனச் சட்டம் (Constitution of India) நடைமுறைக்கு வந்து சட்டத்தின் ஆட்சி தொடங்கிய நாள் தான் அது. அதற்கு முன்பு வரலாற்றில் பல்வேறு வகையான ஆட்சி முறைகளின் கீழ் இந்திய மக்கள் ஆளப்பட்டார்கள். வெள்ளையர்கள் இந்த நாட்டை அடிமைப்படுத்திய பிறகு அவர்களால் ஜனநாயகம், மக்களாட்சி, பாராளுமன்றம், சட்டமன்றம் என்ற ஆட்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த ஜனநாயக ஆட்சியில் யாருக்கு மிக உயர்ந்த அதிகாரம் என்றால் அரசியல் சாசனச் சட்டத்திற்குத் தான் உயரிய அதிகாரமும் அந்தஸ்தும் உள்ளது.

சாசன சட்டத்தைவிட இந்த நாட்டில் யாரும் உயர்ந்தவர், அதிகாரம் படைத்தவர் என எவருமே இல்லை. அப்படிப்பட்ட இந்த அரசியல் சாசனச் சட்டத்தை அமல்படுத்துகின்ற ஜனநாயக கட்டமைப்பு தான் பாராளுமன்றம், சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதிமன்றங்கள் போன்றவை. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கைதான் நம் நாட்டின் மனச்சாட்சி. அதுதான் இது வரையிலும் நாட்டில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களும் ஓரளவிற்கு இந்த ஜனநாயக அமைப்பில் நம்பிக்கை வைப்பதற்கு அடித்தளமாக அமைந்து இருக்கிறது. வரையறுத்து எழுதப்பட்ட சட்டத்தின் ஆட்சி நடைபெற்று வரும் நம் நாட்டில் பல நூறு சாதி, மத, இன, மொழி பிராந்திய மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். உலகில் எங்கும் இப்படி ஒரு கூட்டு கலவையை காண இயலாது. அவரவரின் பாரம்பரிய பண்பாடும், கலாச்சாரமும் மொழியும் பாதுகாக்கப்படுகின்ற வகையில் எல்லோருக்குமான உரிமைகளை அளிக்கிறது அரசியல் சாசன சட்டம் என்ற அடிப்படையில் அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதன்படி நாட்டின் வளர்ச்சி முன்னேற்றம் அனைத்திலும் எல்லா சமூக மக்களும் பங்களிப்புச் செய்வதற்கான வாய்ப்புகளை பெற்றிருக்கின்றனர். பங்களிப்பு அளவுகளில் வேண்டுமானால் சற்று சதவிகித வித்தியாசங்கள் இருக்கலாம்.

சட்டம் நடைமுறைக்கு வந்து 59 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகத்தில் பெருபான்மையாக உள்ள முஸ்லிம் சமூகம், சமூக அளவில் அனைத்து துறைகளிலும் பிற எல்லா சமூகங்களைக் காட்டிலும் மிகவும் பின்தங்கியிருக்கிறது என்பதை அரசின் பல ஆய்வுகள் தெளிவுறுத்துகின்றன. மேலும் பாதுகாப்பு அளவில் மிகவும் அபாயகரமான சூழலில் முஸ்லிம் சமூகம் வாழ்வதாக அரசின் ஆய்வுக் கமிட்டி அறிக்கைகளும் விவரிக்கின்றன. இத்தகைய சூழலுக்கு என்ன காரணம் என்று முஸ்லிம் சமூகம் முதலில் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரசியல் ரீதியாக நடைபெற்ற பல்வேறு சம்பவங்கள் இந்த பின்னடைவிற்கும் காரணம் என்றாலும் முஸ்லிம் சமூகத்தின் வழிபாட்டு உரிமையிலிருந்து சமூக பாதுகாப்பு தொடர்பான அனைத்து விசயங்களுக்கும் ஓரளவிற்கு உத்திரவாதம் தருகின்ற அரசியல் சாசன சட்டத்தை அறிந்து கொள்வதிலும் உரிமைகளை எளிதாக பெறுவதற்கான ஏற்ற வழியாக இருக்கக்கூடிய நீதிமன்ற வழிமுறையை முஸ்லிம் சமூகம் பின்பற்றுவதிலும் அதிக அளவு அக்கறை செலுத்தவில்லை என்பது தான் மிக முக்கியமான காரணம்.

சாசன சட்டம் மீறப்படுகின்ற போதோ அல்லது சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அரசும் அரசு நிருவாகமும் பாரபட்சம் காட்டினாலோ அவற்றை நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுத்து சென்று நீதி பெற முடியும். இந்த நாட்டில் பாதிக்கப்படுகின்ற மக்கள் நீதி நியாயம் பெற உள்ள ஒரே இடம் நீதிமன்றம்தான். இந்த வழிமுறையை தெரிந்து கொண்ட சில சமூகங்கள் சட்டத்தை வைத்து அதன் சந்து பொந்துகளில் நுழைந்து இன்று வரை எல்லா வகையான வசதி வாய்ப்புகளையும் பெற்று சாதித்து வருகின்றனர். சட்டத்துக்குப் புறம்பான அவர்களது நடவடிக்கைகளுக்கு சட்டமே பாதுகாப்பு கொடுக்கின்ற அளவுக்கு அதை வளைத்து இந்த நாட்டின் வளங்கள் அனைத்தையும் அவர்களே அனுபவிக்கிறார்கள். ஒரு சமுதாயத்தின் பாதுகாப்பு முன்னேற்றம் அனைத்தையும் ஜனநாயக முறையில் பெற வேண்டுமானால் சட்டம் குறித்த அறிவு அதிகம் தேவை. அப்படிப்பட்ட சட்டத்தை நிலை நிறுத்துகின்ற நீதித்துறையில் சட்ட வல்லுநர்களாக பெருமளவில் முஸ்லிம் சமூகம் மாற வேண்டும். கடந்த காலங்களில் சட்டத்தை நிலை நிறுத்துகின்ற நீதித்துறையில் முஸ்லிம் சமூகம் எவ்வளவு பங்களிப்பு செய்துள்ளது என்பதை இந்த புள்ளி விவரத்தை வைத்தே அறிய முடிகின்றது.

***சென்னை உயர்நீதிமன்றத்தில் இதுவரையில் தலைமை பொறுப்பு வகித்த தலைமை நீதிபதிகளின் பட்டியல் இங்கே தரப்பட்டுள்ளது.***

The Honourable Chief Justices of Madras high Court

| | |
|---|---|
| Sir Thomas Andrew Lumisden Strange | 1801-1816 |
| Sir John Henry Newbolt | 1816-1820 |
| Sir Edmond Stanley | 1820-1825 |
| Sir Ralph Palmer | 1825-1835 |
| Sir Robert Buckley Comyn | 1835-1842 |
| Sir Edward John Gambier | 1842-1850 |
| Sir Christopher Rawlinson | 1850-1859 |
| Sir Henry Davison | 1859-1860 |
| Sir Colley Harman Scotland | 1860-1871 |
| Sir Walter Morgan | 1871-1879 |
| Sir Charles Arthur Turner | 1879-1885 |
| Sir Arthur John Hammond Collines, Q.C | 1885-1899 |
| Sir Charles Arnold White | 1899-1914 |
| Sir John Edward Power Wallis, P.C | 1914-1921 |
| Sir Walter George Salis Schwabe, K.C | 1921-1924 |
| Sir Murray Coutts - Tratter | 1924-1929 |
| Sir Horace Owen Compton Beasley | 1929-1937 |
| Sir Alfred Henry Lionel Leach | 1937-1947 |
| Sir Fredrick William Gentle | 1947-1948 |
| Sir Pakala Venkate Rajamannar | 1948-1961 |
| Sir Subramanya Ramachandra Iyer | 10-05-1961 |
| Sir Palagani Chandra Reddy | 23-11-1964 |
| Madavayya Anantanarayanan | 01-07-1966 |
| Kuppuswami Naidu Veeraswami | 01-05-1969 |
| Palapatti Sadaya Goundar Kailasam | 08-04-1976 |
| Padmanabhapillay Govindan Nair | 03-01-1977 |
| Tayi Ramaprasada Rao | -29-05-1978 |
| **MUHAMMAD KASSIM MUHAMMAD ISMAIL** | **-06-11-1979** |
| Krishna Ballabh Narayan Singh | 12-03-1982 |
| Madhukar Narhar Chandurkar | -02-04-1984 |
| Shanmughasundara Mohan | -19-10-1989 |
| Adarsh Sein Anand | -01-11-1989 |
| Kanta Kumari Bhatnagar | -15-06-1992 |
| Kudarikoti Annadanayya Swamy | -01-07-1993 |
| Manmohan Singh Liberhan | 07-07-1993 |
| Ashok Chhotelal Agarwal | 24-05-1999 |

| | |
|---|---|
| Konakuppakattil Gopinathan Balakrishnan | 09-09-1999 |
| Nagendra Kumar Jain | 13-09-2000 |
| B. Subhashan Reddy | 12-09-2001 |
| Markandey Katju | 12-09-2001 |
| Markandey Katju | 28-11-2004 |
| Ajit Prakash Shah | 2005 |
| Ganguly | 2006-2008 |
| S.J. Mukhopadhaya | Present |

*சென்னை உயர்நீதிமன்றம் 1801ல் தொடங்கப்பட்டது. அன்று முதல் இன்று வரையிலான 208 ஆண்டு காலத்தில் ஒரே ஒரு முஸ்லிம் மட்டும் தான் தலைமை நீதிபதியாக பதவி வகித்துள்ளார். இதிலிருந்தே இந்திய முஸ்லிம்களும் தமிழக முஸ்லிம்களும் நீதித்துறையில் எவ்வளவு பின்தங்கியுள்ளோம் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இதன் காரணமாக இன்றளவிற்கும் முஸ்லிம் சமூகம் கடுமையான சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்து வருவதை கண்கூடாக கண்டு வருகிறோம்.*

*சமீப காலமாக வட இந்தியாவில் பல்வேறு பயங்கரவாத சம்பவங்கள் நடைபெறுகின்றன. எந்த சம்பவம் நடைபெற்றாலும் உடனடியாக முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள். காவல் துறையினரால் சித்தரவதை செய்யப்படுகிறார்கள். சம்பவம் நடந்த உடனேயே முஸ்லிம்கள்தான் இத்தகைய பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் என்ற அவதூறு பிரச்சாரமும் மீடியாக்கள் மூலமும் காவல் துறையின் ஒரு சிலராலும் செய்யப்படுகிறது. பிறகு சில நாட்கள் கழித்து கைது செய்யப்பட்ட அந்த இளைஞர்களை ஆதாரம் இல்லை எனக்கூறி விடுவித்து விடுகிறார்கள். விடுவித்த செய்தி எந்த மீடியாக் களிலும் வருவதே இல்லை. இதன் காரணமாக முஸ்லிம்கள் என்றாலே பயங்கரவாதிகள் என்ற எண்ணம் பொது மக்களிடம் மட்டுமல்ல நீதித்துறையிலும் ஆழமாக வேரூன்றி உள்ளது. இதனால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் முஸ்லிம்களுக்காக வாதாடுவதற்குக் கூட தடை விதித்து பார் கவுன்சிலில் (வழக்கறிஞர்கள் சங்கம்) தீர்மானம் நிறைவேற்றியுள்ள சம்பவங்கள் உ.பி. போன்ற மாநிலங்களில் நடந்துள்ளன. ஒருசில மனித உரிமை அமைப்பு வழக்கறிஞர்களின் உதவியால்தான் பாதிக்கப்பட்ட ஒரு சில முஸ்லிம்களுக்கு நீதி கிடைத்து வருகிறது.*

*ஆக ஒரு சமுதாயத்தை சமூக ரீதியாக பாதுகாத்திட இந்த நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உள்ள ஒரே ஆயுதம் சட்டம்தான். அதை நிலைப்படுத்துகின்ற நீதித்துறையில் முஸ்லிம்கள் முழுமையான கவனம் செலுத்திட வேண்டும். இளைய தலைமுறையினரை, அதாவது தற்போது படித்துக் கொண்டிருக்கின்ற மாணவ, மாணவிகளிடம் சட்டம் பயில ஆர்வத்தையும் வழிகாட்டுதலையும் செய்திட வேண்டும். அவர்களை சமூக அக்கறையுள்ள மார்க்க சிந்தனையுள்ள வழிக்கறிஞர்களாக உருவாக்கிட வேண்டும். அப்படி உருவாக்கினால் மட்டும்தான் இந்தச் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும். அதை இந்த சமூகம் தான் செய்ய வேண்டும். அவசர அவசியமும் கூட.*

*இன்ஷா அல்லாஹ் சமூக நீதி அறக்கட்டளை சார்பில் வருகின்ற கல்வி ஆண்டில் ஏறக்குறைய 50 மாணவர்களை சட்டக் கல்லூரியில் சேர்த்து அவர்களை முஸ்லிம் சமுதாயத்தின் நலனிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனிலும் அக்கறையுள்ள வழக்கறிஞர்களாக உருவாக்கிட திட்டமிட்டுள் ளோம். இதுவரையிலும் 150 விண்ணப்பங்கள் வந்துள்ளன. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாணவ, மாணவிகளைத்தான் தேர்வு செய்வது என்று முடிவு செய்துள்ளோம். வசதி படைத்த மக்கள் இந்த மாணவர்களை சமுதாயத்திற்கான வழக்கறிஞர்களாக உருவாக்கிட தங்களால் இயன்ற அளவு பொருளாதார உதவிகளை அளித்திட வேண்டுகிறோம். உங்கள் குழந்தைகளையும் சிறந்த வழக்கறிஞர்களாக உருவாக்கிட வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.*

**CMN சலீம்**

**1/2/2009**